


தனி பிரதி
ரூ.10/-


PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்


கதிர் 44 | பாரிப்பு 6 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 2013


மனித நேய பொறியாளர் **ஜான் பென்னி குவிக்** அவர்களுக்கு நினைவு மணி மண்டபம் அமைத்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.




நூற்றாண்டு விழா சங்கம்

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

தோற்றம் 1910

நூற்றாண்டு 2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் மடல்

மடல் – 6(2012-2013)

# தொடரும் நம் பயணம்......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

275 உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 174 பேர் போக மீதமுள்ள 101 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதில் இளநிலைப் பொறியாளர்கள் பதவி உயர்வில் 5வது இடம் (5th Vacancy) பணியிடத்தில் தங்களை அமர்த்தி உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று ஓவர்சீயர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற சில நண்பர்கள் தொடுத்துள்ள வழக்கு மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர் ஒருவர் சம்பந்தப்பட்ட வழக்கு, இந்த மாதத்தில் அதிகமான அரசு விடுமுறை நாட்கள் ஆகியவை காரணமாக மேற்கண்ட உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் சிறிது காலதாமதம் ஆகிக் கொண்டு வருகிறது. மேற்கண்ட 5வது இடம் (5th Vacancy) பணியிடம் சம்பந்தமாக விதிகள் (Rules) படியும், ஏற்கனவே தமிழ்நாடு பொறியியல் சங்கம் மாநிலப் பொதுக்குழு மற்றும் மாநிலச் செயற்குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் படியும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பதவி உயர்வு பட்டியல் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் பெற முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

திரு.ராஜீவ் ரஞ்சன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒருநபர் குழு பரிந்துரைகளில் உள்ள ஊதிய முரண்பாடுகளை களைய அமைக்கப்பட்ட ஊதிய குறை தீர்க்கும் பிரிவு (Pay Redressal Cell) தன் பரிந்துரைகளை இன்னும் அரசுக்கு சமர்ப்பிக்கவில்லை. கல்வித் துறையை சார்ந்த ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி கேட்ட கேள்விகளுக்கு ஊதிய குறை தீர்க்கும் பிரிவு பதிலளித்துள்ளது. அதில் தங்களின் பரிந்துரைகளை இன்னும் அரசுக்கு சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. (அந்த கடித நகல் இந்த மாத பொறியியல் கதிர் பக்கம் எண்.20-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது).

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்ய தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு கால அட்டவணை 2013-2014 (Annual Planner)-ல் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்வது இடம் பெற்றுள்ளது. மேலும் நெடுஞ்சாலைத் துறையில் இளநிலைப் பொறியாளர்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்ய தடையாக இருந்த வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. எனவே 50 + 17 = 67 பதவிகளை நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த மாத பொறியியல் கதிரில் பக்கம் எண்.22-23ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ள 46 + 42 = 88 இளநிலைப் பொறியாளர் பதவிகளையும் இதனுடன் சேர்க்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு

வருகிறோம். எனவே இந்த வருடம் பொதுப்பணித்துறைக்கு 138 இளநிலைப் பொறியாளர் பதவிகளும் நெடுஞ்சாலைத் துறைக்கு 17 பதவிகளும் ஆக 155 இளநிலைப் பொறியாளர் பதவிகளை நிரப்ப தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். கண்டிப்பாக இந்த வருடம் 138 இளநிலைப் பொறியாளர்கள் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் பொதுப்பணித்துறையில் பணியமர்த்தப்படுவார்கள்.

அதிகாரிகளின் மெத்தன போக்கால் தாமதப்பட்டு வரும் இளநிலைப் பொறியாளர் / c j t pg; nghwpahs H gz p ud Ki w (Regularisation) காரணமாக மேற்கண்ட பொறியாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே அதிகாரிகளின் மெத்தன போக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல நான்கு கட்ட போராட்டங்களை அறிவித்திருக்கிறோம். இந்த போராட்டங்களில் பொறியாளர் சகோதர, சகோதரிகள் திரளாக கலந்து கொண்டு மேற்கண்ட போராட்டங்கள் வெற்றி பெற ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

**த. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் **9444 999 588**
**9281 309 688**
**E.mail: d.murugavelsivan@gmail.com**

**தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) தேர்வு**
**கால அட்டவணை 2013-2014**


**இளநிலைப் பொறியாளர் தேர்வு - பொதுப்பணித்துறை 50, நெடுஞ்சாலைத்துறை 17**

| | | |
|---|---|---|
| அறிவிப்பு வெளியாகும் நாள் | - | ஜூலை 2013 |
| தேர்வு நாள் | - | 22.09.2013 |
| தேர்வு முடிவு | - | அக்டோபர் 2013 |
| நேர்முக தேர்வு | - | நவம்பர் 2013 |

அறைகூவல்

"ஸ்தாபனம் இல்லாத போராட்டம் ஆயுதம் இல்லாத அசட்டுத்தனம்!
போராட்டம் இல்லாத ஸ்தாபனம் பயன்பாடற்ற போலித்தனம்!!"





# விவாஹ சுபமுஹூர்த்தப் பத்திரிக்கை

அன்புடையீர்! வணக்கம்

ஸ்ரீ காளிகாம்பாள் திருவருள் துணைக்கொண்டு நிகழும் மங்களகரமான நந்தன வருடம் மாசி மாதம் 10-ம் தேதி (22.02.2013) வெள்ளிக்கிழமை சுக்லபட்சம் துவாதசி புனர்பூசம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.30 மணிக்குமேல் 9.00 மணிக்குள்ளாக மேஷ லக்னத்தில்



வாசனம்பேடு, தெய்வத்திரு.E.துரைசாமி-தெய்வத்திருமதி.D.பட்டம்மாள் அவர்களின் பௌத்திரனும்,
திரு.D.விஜயராமகிருஷ்ணா-திருமதி.D.சாந்தி தம்பதியரின் சீமந்த புத்திரன்

**சிரஞ்சீவி Er. R. பாலாஜி**, B.E., M.S.,

(Technology Analyst, Infosys Limited) என்கிற வரனுக்கு

ன்னை, இராயப்பேட்டை, தெய்வத்திரு.R.துரைசாமி-திருமதி.D.சரோஜா அம்மாள் அவர்களி
பௌத்திரியும், திரு.D.இராம மோகனதுரை-திருமதி.R.மாலதி தம்பதியரின் சீமந்த புத்திரி

**சௌபாக்கியவதி Dr. R. திவ்யா,** M.B.B.S.,

என்கிற கன்னிகையை



இல்வாழ்க்கை துணைவியாக்க பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் சென்னை-28, ராஜா அண்ணாமலைபுரம், நெ.75/2, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகரில் அமைந்துள்ள **மேயர் ஸ்ரீ ராமநாதன் செட்டியார் சென்டர் - வள்ளியம்மை ஹால் A/c திருமண மாளிகையில்** நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.


**வரவேற்பு**

**21.02.2013 வியாழக்கிழமை**

**மாலை 6.30 மணிக்குமேல்**

**இன்னிசை**

**திரைப்பட நடிகர் கருணாஸ் கிரேஸ்**
**மேஸ்ட்ரோ ஆர்க்கெஸ்ட்ரா**



**தங்கள் அன்புள்ள,**
**Er. D. சாந்தி,** D.C.E., B.Tech.,
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து.,
முன்னாள் வெளியீட்டுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.
Cell: 94451 81810, 98408 44292.

இந்த அழைப்பிதழையே நேரில் வந்து அழைத்ததாக கருதி அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# 05.01.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 05.01.2013 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநில துணைத் தலைவர் மாநிலத் தலைவர் கூடுதல் பொறுப்பு பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை கிளை சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் என்.புண்ணியக்கோட்டி அவர்களும், மையச் சங்கம் சார்பாக வடக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் பி.குணதரன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.நந்தகுமார் அவர்கள் தன்னுடைய உரையில் மாற்று சங்கத்தினர் தரும் அடுக்கடுக்கான தொல்லைகள் குறித்தும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் இல்லையென்றால் நம்மை முழுவதுமாக அழித்துவிடுவார்கள். எனவே அனைவரும் சங்க உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் மேலும் நம்மிடம் நிதி ஆதாரம் இல்லையென்றும் கூறினார்.

மாநில துணைத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தன்னுடைய உரையில் நூற்றாண்டு விழா குறித்து விரிவாக விவாதிக்க வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் சென்னை கிளை சார்பில் பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

சென்ற மையச் செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடு, மீதமுள்ள 101 நபர்களுக்கு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் பணிவரன்முறை, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்வது, ஓவர்சீயர் பிரிவுகளை சாதாரண பிரிவுகளாக மாற்றியது, அரசாணை எண்.66, அரசாணை எண்.124, பணியிடை காலம் பிழை பொறுத்தல் கோப்பு, பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு, விதித்திருத்தம் (Amendment) உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். சங்கம் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் பொறியியல் கதிரில் பிரசுரிப்பதில்லை என்றும் காரணம் நம் முன்னேற்றத்தை தடுக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ய அது ஏதுவாகிவிடும் என்றும் குறிப்பிட்டார். மிக சொற்பமான

ஒரிருவர் சங்க கூட்டங்களில் பேசும் போது, தங்கள் சுய நலத்திற்காகவோ, உள்நோக்கத்துடனோ எதிர்மறையாக பேசி (Negative) உறுப்பினர்களிடையே ஒரு Negative Vibrationஐ ஏற்படுத்துவது சரியல்ல என்றும், இந்த Negative Vibration சங்கத்தின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்றும், மற்றவர்களின் உணர்வுகளையும் குறைய செய்கின்ற ஒரு செயலாக இது அமைந்து விடும் என்றும், குறை கூறும் அந்த ஒரிருவருக்கு அந்த பிரச்சினையை எப்படி தீர்க்க வேண்டும் என்றும் சொல்ல தெரிய வேண்டும், ஆனால் அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு சங்கம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால் அவர்களுக்கு சொல்ல தெரியாது என்றும் சங்கம் எல்லா பிரச்சினைகளை தீர்ப்பதிலும் மிகமிக சிறப்பாக செயல்படுகிறது என்றும், சாதாரணமாக நடக்க வேண்டிய காரியங்களுக்கு கூட போராட வேண்டிய ஒரு அவல நிலை பட்டயப் பொறியாளர்களுக்கு பொதுப்பணித்துறையில் உள்ளது என்றும், தமிழ்நாடு பொறியியல் சங்கம் இல்லையென்றால் பட்டயப் பொறியாளர்களையும், பகுதி நேரப் பட்டப்படிப்பு பயின்றவர்களையும் யாராலும் காப்பாற்ற முடியாது என்றும் எனவே சங்க உறுப்பினர்கள் அனைவரும் சங்க உணர்வோடு இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

உறுப்பினர்கள் கருத்துகள் பகுதியில் பொறியாளர்கள் கே.என்.ரஞ்சன் பொருளாளர் கோவை-பொள்ளாச்சி கிளை, பி.குலசேகரன், செயலாளர் மதுரைக் கிளை, ஏ.மோகனதாஸ் துணைத் தலைவர் கன்னியாகுமரி கிளை, வி.பரமசிவம் இணைச் செயலர் சிவகங்கை கிளை, பி.முத்துசாமி செயலாளர் திருநெல்வேலி-தூத்துக்குடி கிளை, வி.ரவிச்சந்திரன் பொருளாளர் இராமநாதபுரம் கிளை, எஸ்.பொன்னுசாமி இணைச் செயலர் கோவை-பொள்ளாச்சி கிளை, என்.நாகராஜன் செயலாளர் தஞ்சாவூர் கிளை, என்.பாஸ்கர் செயலாளர் கடலூர் கிளை, சி.கணபதி துணைத் தலைவர் திருவாரூர்-நாகை கிளை, எஸ்.ஆறுமுகம் தலைவர் சேலம் கிளை, எஸ்.கிருஷ்ணன் இணைச் செயலாளர் தருமபுரி கிளை ஆகியோர்களும் பொதுச் செயலாளர் உரையின் மீது தங்கள் கருத்தை தெரிவித்தார்கள்.

மண்டலச் செயலாளர்கள் தங்கள் மண்டல செயல்பாடுகள் குறித்து பேசினார்கள். குறிப்பாக மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எம்.பஞ்சவர்ணம் அவர்கள் தனது உரையில் இந்த கூட்டத்திற்கு வரும்போது நிறைய கேள்விகளுடன் வந்தேன். ஆனால் பொதுச் செயலாளர் உரையை கேட்ட பிறகு "மகுடிக்கு மயங்கிய பாம்பு போல" ஆகிவிட்டேன். அத்தனை கேள்விகளுக்கும் தெளிவான விடை கிடைத்துவிட்டது என்றும் பல பிரச்சினைகளுக்கு வெளியில் சொல்லாமலேயே தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிறப்பான நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கூறினார்.

மூத்தப் பொறியாளர்கள் சி.பி.சண்முகம், டி.பி.பாலசுப்பிரமணியம், ஆர்.சேஷகிரி, ஜி.பாலசுப்பிரமணியம், டி.வி.கோமதிநாயகம் ஆகியோர்களும் உரையாற்றினார்கள்.

பேரவையின் மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன், பொதுச் செயலாளர் பொறியாளர் கே.வாசுதேவன் ஆகியோர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.நடராஜன் அவர்களால் 01.08.2011 முதல் 30.11.2012 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.பெ.வெங்கடாசலம் அவர்கள் 01.08.2011 முதல் 31.12.2012 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் பொறியியல் கதிர்,

நாட்சுவடி, நாட்காட்டி ஆகியவை குறித்து அவையில் எடுத்துரைத்தார்.

வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் மிகச் சிறப்பான முறையில் நாட்சுவடி, நாட்காட்டி வெளியிட்டதற்க்கும் அதை உரிய காலத்தில் வெளியிட அவர் எடுத்த முயற்சிகளுக்கும் அவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.நந்தகுமார் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் காலியாக உள்ள மாநிலத் தலைவர் பதவிக்கு அடுத்த பொதுக்குழு வரை இடைகால தலைவரை நியமிக்க தேர்தல் நடைபெற்றது. இந்த பதவிக்கு பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதால் காலியாக உள்ள மாநிலத் துணைத் தலைவர் பதவிக்கு பொறியாளர் எஸ்.பொன்னுசாமி அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஓய்வு பெற்ற முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.நந்தகுமார் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. மையச் சங்கப் பொறுப்பாளர்கள், கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். நினைவு பரிசு வழங்கப்பட்டது. மாநிலப் பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் மற்றும் பேரவையின் மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன் உள்ளிட்டோர் அவரை வாழ்த்திப் பேசினார்கள்.

நூற்றாண்டு நிறைவு விழா குறித்து பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் பேசினார். மூத்தப் பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

சென்னை கிளை சார்பாக இணைச் செயலாளர் பொறியாளர் ஆர்.சண்முகம் அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்களும் நன்றி கூற மையச் செயற்குழுக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

மையச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள் :**

1. சுமார் 400 இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை மிகுந்த காலதாமதம் ஆவதால் அவர்களின் பதவி உயர்வு, பதவி பெயர் மாற்றம் ஆகியவை கிடைக்காமல் மாபெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதால் அதிகாரிகளின் மெத்தன போக்கை, அலட்சிய போக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு செல்ல கீழ்கண்ட நான்கு கட்ட போராட்டங்கள் நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

   1) கைப்பிரதி, சுவரொட்டிகள் அடிப்பது.
   2) வாயிற்கூட்டம் நடத்துவது.
   3) ஒருநாள் அடையாள உண்ணாவிரதம்.
   4) தொடர் உண்ணாவிரதம்.

2. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு 5 ஆண்டுகள் உதவிப் பொறியாளர்களாக பணிபுரிந்திருக்க வேண்டும் என்று பதவி பெயர் மாற்றம் (Redesignation) பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு சற்றும் பொருந்தாத, தவறாக புரிந்து கொள்ளப்பட்ட விதிக்கு, தெளிவாக புரிந்து கொள்ளும் வண்ணம் விதித்திருத்தம் (Amendment) வழங்க அரசை கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்படுகிறது.

3. உதவிப் பொறியாளர்களின் பணி மூப்பு பட்டியல் (Seniority List) வெளியிட முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

4. உதவிப் பொறியாளர்களாக 5 ஆண்டுகள் பணிபுரியவில்லை (On Duty) என்று காரணம் காட்டி 175 உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் விடுபட்டு

போனவர்களுக்கு உரிய முதுநிலையில் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க தமிழக அரசை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

5. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் இளநிலைப் பொறியாளர்கள் தேர்வு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால் தற்போது தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு நீதி மன்ற தடையாணை பெறுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

6. கிளைச் சங்கங்கள் மையச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை கீழ்கண்டவாறு மாற்றியமைக்க தீர்மானிக்கப்படுகிறது.

| | முந்தைய சந்தா தொகை | திருத்தப்பட்ட சந்தா தொகை |
|---|---|---|
| உறுப்பினர் (Member) | 350 | 500 |
| ஆயுள் உறுப்பினர் (Life Member) | 150 | 250 |
| கூடுதல் நாட்குறிப்பு (Extra Diary) | 75 | 150 |
| கூடுதல் நாட்காட்டி (Extra Calendar) | 25 | 35 |

7. பொதுப்பணித்துறையில் நிர்வாகம் சிறப்பாக செயல்பட, துறைச் சார்ந்த பணிகள் தரத்துடனும் சிறப்பாகவும் நடக்க கடந்த 26 ஆண்டுகளாக பொதுப்பணித்துறையில் பட்டயம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போனதாலும், ஒரு பிரிவிற்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் (Technical Assistant) நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

8. ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றத்தை சேர்ந்த மூத்தப் பொறியாளர்கள் தங்களிடையே உள்ள கருத்து வேறுபாட்டின் காரணமாக அதில் ஒரு பிரிவினர் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் செயல்பட்டதால் இருதரப்பினருக்கும் சேலத்தில் உள்ள தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் கூட்டம் நடத்த அனுமதிக்க கூடாது என்று சேலம் கிளைச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு மாநிலச் செயற்குழு ஒப்புதல் அளிக்கிறது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் செயல்பட்ட அந்த மூத்தப் பொறியாளரை அடையாளம் கண்டு தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு தெரிவிக்கும் வரை ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றத்தின் இரு தரப்பினருக்கும் சேலம் கட்டிடத்தில் கூட்டம் நடத்த அனுமதி இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.

9. 1983 ஆம் ஆண்டு தொழில் நுட்ப உதவியாளர்கள் (Civil) போதிய அளவு கிடைக்காத காரணத்தால் தொழில் நுட்ப உதவியாளர்கள் (சிவில் / மெக்கானிக்கல்) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு போதிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு சிவில் / மெக்கானிக்கல் இரு பிரிவினருக்கும் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் விதிகளின்படி பொதுவான முதுநிலை (Seniority) பட்டியல் தயாரிக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு மேற்கண்ட தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் போது முதுநிலையில் முதலில் இருந்த மெக்கானிக்கல் தொழில் நுட்ப உதவியாளர்களை முதுநிலையில் பின்னுக்கு தள்ளிவிட்டு சிவில் தொழில் நுட்ப உதவியாளர்களை முதுநிலையில் முன்னதாக வைத்து 1997 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. மீதமுள்ள தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு (மெக்கானிக்கல்) 1999 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. விதிகளின் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் அமைக்கப்பட்ட முதுநிலையின் படி 1997-1999 வரை இரண்டு ஆண்டுகளுக்கு எந்தவித பணபயனுமின்றி இளநிலைப் பொறியாளர்கள் பதவியில் முதுநிலை மாற்றி அமைக்க முதன்மை தலைமைப் பொறியாளரை வலியுறுத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

# MEMBERSHIP NUMBERS FOR THE NEW MEMBERS

| M.No | Name | Designation | Date of Birth | Branch |
|---|---|---|---|---|
| 4274 | C. Chellakumar | W.I | 11.02.70 | Theni |
| 4275 | M. Mahendran | W.I | 16.06.73 | Theni |
| 4276 | R. Rajangam | W.I | 01.11.68 | Theni |
| 4277 | M. Ramesh | W.I | 06.11.75 | Thanjavur |
| 4278 | S. Thiruvenkadam | W.I | 21.05.70 | Kanchipuram |
| 4279 | A. Soundararaj | A.E.E | 05.09.60 | Chennai |
| 4280 | K. Sankaran | T.A | 05.04.67 | Chennai |
| 4281 | G. Vijayasekar | T.A | 26.04.71 | Coimbatore |
| 4282 | K. Anandaraju | W.I | 26.05.64 | Coimbatore |
| 4283 | R. Natarajan | W.I | 11.11.67 | Coimbatore |
| 4284 | R. Thirunavukkarasu | W.I | 25.07.71 | Coimbatore |
| 4285 | N. Padmini | W.I | 22.11.72 | Ramnad |

The Members who were not allotted membership numbers, please contact your branch office bearers with your date of birth.

**Er. K. Kamaldeen,**
Secretary (Organisation & Legal)

---

## வேண்டுகோள்

அகில இந்திய அளவில் நூற்றாண்டு விழா கொண்டாடும் இரண்டாவது சங்கம் என்று பெருமைக்கு சொந்தமான நமது சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பாக சீரிய முறையில் நடத்திட பல உறுப்பினர்கள் நூற்றாண்டு விழா நன்கொடையை வழங்கியுள்ள போதிலும் மிகச் சில உறுப்பினர்கள் இன்னமும் வழங்காதது மிகவும் வருத்தமளிக்கிறது.

எனவே உறுப்பினர்கள் அனைவரும் நூற்றாண்டு விழா நன்கொடை நிலுவை தொகையினை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிளைப் பொறுப்பாளர்கள் தங்கள் கிளையின் சார்பாக மையச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஏனைய நிலுவை தொகையினை மையச் சங்கத்திற்கு உடனே செலுத்தி ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**- பொறியாளர் ஏ.நடராஜன், நிதிச் செயலாளர்.**

நிதி (ஊதிய குறை தீர்க்கும் பிரிவு)த் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.

**கடித எண்.69278/ஊ.கு.தீ.பி./2012-2 நாள் 09.01.2013**

அனுப்புநர்
து.ஸ்ரீதர், பி.ஏ.,
அரசு சார்பு செயலாளர்/
பொது தகவல் அலுவலர்.

பெறுநர்
திரு.செ.கிப்ஸன்,
235, வடக்குத் தெரு,
பாப்பாடி - 627 110.
திருநெல்வேலி மாவட்டம் (இணைப்புடன்).

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் பெறப்பட்ட மனு தொடர்பாக.

பார்வை: 17.12.2012 அன்று பெறப்பட்ட 07.12.2012 நாளிட்ட தங்களது மனு.

பார்வையில் காணும் தங்களது மனுவின் மீது கவனம் ஈர்க்கப்படுவதுடன் அதில் கோரப்பட்ட வினாக்களுக்கு கீழ்கண்டவாறு தகவல்கள் அளிக்கப்படுகிறது.

**வினா எண்.1 குறித்து:**

ஊதிய குறை தீர்க்கும் பிரிவு தனது அறிக்கை இன்னும் அரசிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

**வினா எண்.2 குறித்து:**

கல்வி துறை சார்பாக ஊதிய குறை தீர்க்கும் பிரிவு நேர்க்காணல் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர் சங்கங்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. அதில் பலர் கையொப்பம் மட்டும் இட்டுள்ளதால் அவர்களது பெயர்களை அறிய முடியவில்லை.

**வினா எண்.3 குறித்து:**

ஒவ்வொரு சங்கத்தின் சார்பாகவும் மூன்று பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டனர் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**வினா எண்.4 குறித்து:**

தங்கள் கோரிக்கை மீது ஊதிய குறை தீர்க்கும் பிரிவால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அக்குழு அரசிற்கு சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு பின்னர்தான் அறிய இயலும்.

**வினா எண்.5, 6 & 7 குறித்து:**

ஊதிய குறை தீர்க்கும் பிரிவு தனது அறிக்கையை இன்னும் அரசிற்கு சமர்ப்பிக்கப்படாத நிலையில் இது குறித்த தகவல் ஏதும் இல்லை.

**வினா எண்.8 & 9 குறித்து:**

ஊதிய குறை தீர்க்கும் பிரிவு தனது அறிக்கையை அரசுக்கு இன்னும் சமர்ப்பிக்கப்படாததால் அதன் மொத்த பக்கங்கள் எவ்வளவு என்பதை தெரிவிக்கும் நிலை எழவில்லை.

**வினா எண்.10 குறித்து:**

வீட்டு வாடகைப்படி மற்றும் இதரப் படிகள் புதிதாக வழங்குவது அல்லது அதிகரிப்பது குறித்து பரிசீலனை செய்ய ஊதிய குறை தீர்க்கும் பிரிவின் பணி வரம்பு செய்ய ஆணையில் இடம் பெறவில்லை.

**வினா எண்.11 குறித்து:**

ஊதிய குறை தீர்க்கும் பிரிவின் முடிவின்படி நேர்காணலுக்கு பதிவுப் பெற்ற சங்கங்கள், பதிவுபெறாத சங்கங்கள், தனி நபர்கள் மற்றும் ரிட் மனு தாக்கல் செய்த மனுதாரங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-
அரசு சார்பு செயலாளர் /
பொது தகவல் அலுவலர்.

நகல்
இருப்புக் கோப்பு/ உபரி நகல்

## உயிர் + மெய் = அம்மா

"அம்மா" என்ற வார்த்தை இருக்கிறதே
இது தமிழுக்கு மட்டுமே உள்ள சிறப்பு......
அ - என்பது உயிர் எழுத்து
ம் - என்பது மெய் எழுத்து
மா - என்பது உயிர்மெய் எழுத்து
(மெய் என்றால் உடல் என்று பொருள்)
- அதாவது உடலையும், உயிரையும் இணைத்து கொடுப்பவர் "அம்மா".
- அதனால் தான் "அம்மா" என்கிறோம்.......
ஆனால் இன்று பலர் மம்மி என்று அழைப்பதை தான் விரும்புகிறார்கள்.
"மம்மி" என்றால் பதப்படுத்தப்பட்ட
"பிணம்" என்று பொருள்..........
உயிரும் உடலும் தந்தவளை உயிரோடு பதப்படுத்தாமல்
உயிர்வரை இனிக்கும் தமிழில் மெய்யான அன்பால்
"அம்மா" "அம்மா" என்று அழையுங்கள்.......

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்.697 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.12.2012)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி. N. அனுராதா | இணை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) |
| 2. | N.K. மாதவராஜ் கனேசன் | கண்காணிப்புப் பொறியாளர் (மின்) |
| 3. | R. கந்தசாமி | உதவிச் செயற்பொறியாளர் |
| 4. | C. ஞானசுந்தரம் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 5. | S. முத்துக்குமாரசாமி | உதவி இயக்குநர் (புவி பௌதீகம்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம். சாய்குமார்**
அரசுச் செயலாளர்

நன்றி - தினத்தந்தி (31.01.2013)

## டி.என்.பி.எஸ்.சி. தேர்வு கால அட்டவணை 2013-2014

| வ. எண். | தேர்வின் பெயர் | அறிவிப்பு வெளியாகும் நாள் | தேர்வு நாள் | தேர்வு முடிவு | நேர்முக தேர்வு |
|---|---|---|---|---|---|
| 1. | குரூப்-1 தேர்வு | ஜூலை 2013 | 10.08.2013 (முதல்நிலை தேர்வு) | ஆகஸ்டு 2013 | டிசம்பர் 2013 |
| 2. | குரூப்-1ஏ தேர்வு (உதவி வனப் பாதுகாவலர்) | செப்டம்பர் 2013 | 14.12.2013 முதல் 20.12.2013 | ஜனவரி 2014 | பிப்ரவரி 2014 |
| 3. | குரூப்-1பி தேர்வு (இந்து சமய அறநிலையதுறை உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அதிகாரி கிரேடு-1) (6 காலியிடம்) | பிப்ரவரி 2013 | 31.03.2013 | ஏப்ரல் 2013 | மே 2013 |
| 4. | குரூப்-2 தேர்வு (நேர்முக தேர்வு கொண்ட பதவிகள்) (604 காலியிடம்) | ஜூன் 2013 | 25.08.2013 (முதல்நிலை தேர்வு) | செப்டம்பர் 2013 | டிசம்பர் 2013 |
| 5. | குரூப்-2ஏ தேர்வு (நேர்முக தேர்வு அல்லாத பணிகள்) (789 காலியிடம்) | ஜூலை 2013 | 01.09.2013 (முதல்நிலை தேர்வு) | அக்டோபர் 2013 | அக்டோபர் 2013 |
| 6. | குரூப்-3இ 3ஏ தேர்வு (கூட்டுறவு சங்க இளநிலை உதவியாளர்) (5 காலியிடம்) | ஏப்ரல் 2013 | 06.07.2013 | ஜூலை 2013 | ஆகஸ்டு 2013 |
| 7. | குரூப்-4 தேர்வு (காலியிடம் 2716) | மே 2013 | 28.07.2013 | செப்டம்பர் 2013 | அக்டோபர் 2013 |
| 8. | குரூப்-6 தேர்வு (வனச்சரகர் பதவி) | ஆகஸ்டு 2013 | 20.10.2013 முதல் 26.10.2013 | டிசம்பர் 2013 | ஜனவரி 2014 |
| 9. | குரூப்-7 தேர்வு (இந்து சமய அறநிலையதுறை நிர்வாக அதிகாரி கிரேடு-3) (58 காலியிடம்) | ஜூன் 2013 | 17.08.2013 | செப்டம்பர் 2013 | அக்டோபர் 2013 |
| 10. | குரூப்-8 தேர்வு (இந்து சமய அறநிலையதுறை நிர்வாக அதிகாரி கிரேடு-4) (23 காலியிடம்) | ஜூன் 2013 | 24.08.2013 | செப்டம்பர் 2013 | அக்டோபர் 2013 |

| வ. எண். | தேர்வின் பெயர் | அறிவிப்பு வெளியாகும் நாள் | தேர்வு நாள் | தேர்வு முடிவு | நேர்முக தேர்வு |
|---|---|---|---|---|---|
| 11. | வி.ஏ.ஓ. தேர்வு (காலியிடம் 1500) | ஆகஸ்டு 2013 | 26.10.2013 | டிசம்பர் 2013 | டிசம்பர் 2013 |
| 12. | உதவி புள்ளியியல் ஆய்வாளர் (காலியிடம் 164) | பிப்ரவரி 2013 | 07.04.2013 | மே 2013 | ஜூன் 2013 |
| 13. | மருத்துவர் சிறப்பு தகுதி தேர்வு (காலியிடம் 2800) | மார்ச் 2013 | 21.04.2013 | மே 2013 | ஜூன் 2013 |
| 14. | கால்நடை மருத்துவர் (காலியிடம் 921) | மார்ச் 2013 | 28.04.2013 | மே 2013 | ஜூன் 2013 |
| 15. | கைத்தறி ஆய்வாளர் (காலியிடம் 147) | ஏப்ரல் 2013 | 23.06.2013 | ஜூலை 2013 | ஆகஸ்டு 2013 |
| 16. | உதவி பப்ளிக் புராசிகியூட்டர் கிரேடு-2 (காலியிடம் 88) | மே 2013 | 03.08.2013, 04.08.2013 | செப்டம்பர் 2013 | அக்டோபர் 2013 |
| 17. | கைத்தறி உதவி இயக்குனர் (காலியிடம் 6)<br>உதவி பொறியாளர்-தொழில்கள் (காலியிடம் 40)<br>உதவி மின் ஆய்வாளர் (காலியிடம் 12) | ஜூன் 2013 | 07.09.2013 | செப்டம்பர் 2013 | அக்டோபர் 2013 |
| 18. | பொதுப்பணித்துறை இளநிலை பொறியாளர் சிவில் (காலியிடம் 50)<br>நெடுஞ்சாலைத்துறை இளநிலை பொறியாளர் (காலியிடம் 17)<br>டிராப்ட்ஸ்மேன் கிரேடு-3 (காலியிடம் 17)<br>மதிப்பீடு மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி உதவியாளர் (காலியிடம் 13) | ஜூலை 2013 | 22.09.2013 | அக்டோபர் 2013 | நவம்பர் 2013 |
| 19. | வட்டார சுகாதார புள்ளியியலாளர் (காலியிடம் 37) | ஜூலை 2013 | 29.09.2013 | நவம்பர் 2013 | டிசம்பர் 2013 |

# நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.சுப்பையா அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் V.பிச்சைமுத்து அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் B.சக்காஜி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் A.மோகனதாஸ் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.பாலகங்காதரன் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.சுமதி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் T.உதயகுமார் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.காந்தி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.ஆசைத்தம்பி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.ராஜகோபால் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் E.வேணுகோபால் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் D.சாந்தி உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.நாராயணமூர்த்தி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்றியுடன் விடைபெறுகிறேன்

**திரு.M.சவரிராஜ்,** D.C.E., B.E., AMIE., MIWRS.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

அது 1971 ஆம் வருடம் ஏப்ரல் மாதம், மதுரை புனித பிரிட்டோ உயர்நிலைப் பள்ளியில் S.S.L.C. தேர்ச்சி பெற்று, அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நேரம். நான் 70% க்கு மேல் மதிப்பெண் பெற்றிருந்த படியால், என்னை அஞ்சல் துறை குமஸ்தா பணிக்குச் செல்ல யோசனை தெரிவித்தனர் சிலர். ஆனால் என் தந்தையோ, என்னை பாலிடெக்னிக் பயிலகத்தில் சிவில் பிரிவில் டிப்ளமா முடித்து அதன் பின் வேலைக்கு அனுப்பலாம் என்று தீர்மானித்தார். ஏனெனில் அவர் பணிபுரிந்தது தென்னக இரயில்வேயில் அங்கு டிப்ளமா பொறியாளர்கள் தான் AEN, DEN, Sr.DEN (Now AEE, EE, SE in PWD) பதவிகளில் கோலோச்கிக் கொண்டிருந்தனர். என் தந்தை அவர்களுக்குக் கீழ் பரிபுரிந்ததால், என்னையும் அந்த நிலைக்கு உயர்த்த பட்டயப் படிப்பு கட்டாயமாக பயில பணித்தார்.

அதன்படி நான் மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் முதலாண்டு வகுப்பில் சேர்ந்தேன். அந்த வருடம் மாணவர் சேர்க்கை குறிப்பிட்ட அளவு வரவில்லை என்று கூறி வகுப்பு ஆரம்பிப்பதை சிலமுறை தள்ளி வைத்தனர். அப்போது தமிழ்நாடு முழுவதிலும் இருந்த பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை 35 தான்.

ஏப்ரல் 1974இல் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். ஓரிரண்டு முறை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து சில பணிகளுக்கு விருப்பத்தைக் கோரினார்கள். ஆனால் நான் பொதுப்பணித்துறைக்குத்தான் பணிக்குச் செல்வேன் என்று கூறி எந்த வாய்ப்பையும் ஏற்க மறுத்துவிட்டேன். பிறகு பொதுப்பணித்துறையில் வரைவாளர் தரம் III (Now JDO)ம் நிலையில் 19.11.1974 அன்று கொடகனாறு சிறப்புக் கோட்டம், வேடசந்தூரில் பணியில் சேர்ந்தேன். மூன்று வருடங்கள் அங்கு பணிபுரிந்த பிறகு மதுரைக்கு தன் விருப்ப மாற்றல் பெற்றேன். அப்போது மாநிலத்திலேயே முதன் முதலாக உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தில் ஒரு அங்கமாகிய நீரியல் கோட்டத்தில் பணியமர்வு பெற்றேன். 1979-1982ல் பகுதி நேரப் படிப்பில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்றேன். இந்த மூன்றரை ஆண்டு பகுதி நேரப் படிப்பின் போது நமது சங்க முன்னாள் தலைவர் திரு.எஸ்.நந்தகுமார் எனக்கு படிப்பிலும், மற்ற வகைகளிலும் உறுதுணையாக இருந்தார் என்பதை இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூறுகிறேன். இதற்கிடையில் 1981 ஆம் ஆண்டு இறுதியில் இளநிலைப் பொறியாளராக பதவி உயர்வு வந்தது. அதன்படி நான் 02.07.1982ல் அதே நீரியல் கோட்டத்தில் இளநிலைப் பொறியாளராகப் பணியில் சேர்ந்தேன். பட்டப் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று 12.11.1982 முதல் உதவிப் பொறியாளராக பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதே பிரிவில் பணி தொடர்ந்தது. நண்பர் திரு.எஸ்.நந்தகுமார் அவர்களும் நானும் ஒரே உபகோட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளில் பணிபுரிந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில், உலக வங்கியின் அறிவுறுத்தலின் பேரில், "Computerisation of Irrigation Scheduling of Periyar-Vaigai Project" என்ற ஒரு ஆய்வை பொதுப்பணித்துறை அண்ணா பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்தது. அந்த ஆய்வின் மதிப்பு 1988 ஆம் ஆண்டு ரூ.20 லட்சமாகும். அந்த ஆய்வுக்கு, துறையிலிருந்து ஒரு உதவிப் பொறியாளர் தேவைப்பட்டார். அப்போது நீரியல் கோட்டத்தில் பட்டப் பொறியாளர்களும், பட்ட மேற்படிப்புப் படித்த பொறியாளர்களும் பணியாற்றிய போரிலும் அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் சென்னையில் பல்கலைக் கழகப் பேராசிரியர்களுடன் பணியாற்ற தயங்கிய போரிலும் என்னுடைய செயற்பொறியாளர் மற்றும் உதவிச் செயற்பொறியாளர்கள் (மூவரும் பட்ட மேற்படிப்பு பயின்றவர்கள்) என்னை உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். ஓரிரு மாதங்களில் எனது பிரிவுக்கான சென்னை மாற்றல் அரசாணையை அப்போதிருந்த தலைமைப் பொறியாளர், பெரியாறு மேம்பாட்டுத் திட்டம்,

மதுரை அவர்கள் பெற்றுத் தந்தார்கள். அண்ணா பல்கலைக் கழகம் என்னை வெளி உலகுக்குக் கொண்டு சென்றது. பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதியில் எனக்கு தங்குமிடம் மற்றும் உணவக வசதி செய்து தரப்பட்டது. கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்களுடன் பணிபுரியம் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் குழுவிற்கு பேராசிரியர் டாக்டர்.சக்திவடிவேல் அவர்கள் தலைமை வகித்து வழி நடத்தினார். நான் அங்கு பணிபுரிந்த 30 மாதங்களில் பேராசிரியர்.வ.செ.குழந்தைசாமி மற்றும் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் அண்ணா பல்கலையின் துணை வேந்தர்களாக இருந்தனர். இருவரும் கல்வி விற்பனர்கள். நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பணிகள் முடிவுறாத நிலையில், நான் மறுபடியும் மதுரைக்கு மாற்றப்பட்டேன் (01.02.1991). அதன் பிறகு மூன்று வருடங்கள் அங்கு பணிபுரிந்தேன். 1977 நவம்பர் முதல் 1994 ஜீலை வரை ஒரே கோட்டத்தில் J.D.O., D.O., J.E., A.E., ஆகிய பணிகளில் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

ஜீலை 1994 முதல் செப்டம்பர் 1999 வரை காரைக்குடி திட்டம் மற்றும் வடிவமைப்புக் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் விருதுநகர் உபகோட்டத்தில் பணி மாற்றம் பெற்றேன். அக்டோபர் 1999இல் உதவிச் செயற்பொறியாளராக திருச்சி பாசன மேலாண்மைப் பயிற்சி (IMTI) நிலையத்தில் உதவிப் பேராசிரியராக அயல் பணியில் சேர்ந்தேன். நண்பர் எஸ்.நந்தகுமாரும் அங்கு சேர்ந்தார். அங்கு பணியாற்றியது ஒரு சுகமான சுமை. வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு மாநிலம் முழுவதும் செல்ல நேரிட்டது. அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் பயிற்சிக்காக வெவ்வேறு ஊர்களுக்கும், வெவ்வேறு மாநிலங்களுக்கும் சென்று தங்கி வர நேர்ந்தது. இது தவிர பாசன மேலாண்மைப் பயிற்சி நிலைய ஆசிரியர்களுக்கு வருடம் இருமுறை புத்தாக்கப் பயிற்சி நடைபெறும். ஆகவே தேசத்தின் முதல் தரமான ஆய்வு நிலையங்களுக்கும், பயிற்சி நிலையங்களுக்கும் சென்று வரும் வாய்ப்புகள் கிடைத்தன. இதில் இந்தியாவின் மிக உயரமான ஆணையான பக்ரா-நங்கல் (226 மீட்டர்), மிக நீளமான ஆணையான ஹிராகுட் (25 கிலோ மீட்டர்), உலகின் மிகப் பெரிய பாசன வாய்க்காலான நர்மதா பிரதானக் கால்வாய் (கொள்ளளவு 40,000 கனஅடி வினாடிக்கு) ஆகியவை அடங்கும். பணியின் ஒரு பகுதியாக தமிழகத்தின் அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் சென்று, புகைப்படம் எடுக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அங்கு ஆறு வருட காலம் பணிபுரிந்து, ஆகஸ்ட் 2005இல் இடமாற்றலில் தேவகோட்டை மணிமுத்தாறு வடிநிலக் கோட்டத்திற்கு செயற்பொறியாளரின் நேர்மக தொழில் நுட்ப உதவியாளராகப் பணியேற்றேன்.

அந்தக் கோட்டத்தில் பணியாற்றிய 95% பொறியாளர்கள் நம்மவர்கள். அவர்களுக்கும் சரி செயற்பொறியாளரும் சரி மற்ற கோட்ட அலுவலக ஊழியர்களும் சரி, அனைவரும் என்னிடம் அன்பாகப் பழகினர். அங்கு பணியாற்றிய மூன்று வருடங்களும் தொழில் நுட்ப புத்தகங்களைப் படிப்பதிலும், குறிப்புகள் சேகரிப்பதிலும் கழிந்தது. துறையில் பணியாற்றியதில் அதே மூன்று வருடம் பொற்காலமாகும். பயணம் சுகமாகப் போய்க் கொண்டிருக்கும் போது தீடீரென்று எழுந்த பதவி உயர்வு என்ற சூறாவளியால் நான் மிரண்டு போனேன். தேவகோட்டையிலிருந்து விடுவிடுக்கப்பட்ட போது திரு.பழ.வள்ளியப்பன், செயற்பொறியாளர் அவர்களும் மற்றும் அனைத்து நண்பர்களும் சிறப்பானதொரு பிரிவு பசாரவிழாவை நடத்தி என்னை வழியனுப்பி வைத்தனர்.

ஜீலை 2008இல் அயல்பணியில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன (TNNC)த்தில் செயற்பொறியாளராக பணியேற்றேன். அது உணவுத் துறையின் கீழ்வரும் ஒரு கழகம். உணவு தானியக் கிட்டங்கிகள், அலுவலகங்கள், ஊழியர் குடியிருப்புக்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணி. மாநிலம் முழுவதும் ஏழு மண்டலங்கள், அறுபது மையங்கள் பரவிக்கிடந்தன. எல்லா மையங்களையும் ரயிலில் சென்றடைய முடியும். நிறுவனத்தின் தலைவர் ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி (Principal Secretary). அவர் தந்த ஊக்கத்தினால் உடலும் மனமும் சோராமல் பணிகளை செவ்வனே செய்து வந்தேன். அந்நிறுவன மைய மேலாளர்கள், மண்டல மேலாளர்கள் மற்றும் தலைமை அலுவலக அதிகாரிகள் மத்தியில் நம்பிக்கையைப் பெற்றேன்.

அதே வேளையில் நமது சங்கத்தின் செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்) பதவிக்கு 2008ம் ஆண்டு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டேன். மேலும் பொதுச் செயலாளர் திரு.த.முருகேசன் அவர்கள் இல்லக் காப்பாளர் பொறுப்பையும் எனக்குக் கொடுத்தார். அலுவலகப் பணி காரணமாக செயலாளர் (அமைப்பு மற்றும் சட்டம்) பணியை என்னால் சரிவர ஆற்ற இயலவில்லை. ஆகவே அடுத்த ஆண்டில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் பலர் வற்புறுத்திய போதிலும் கூட, நான் எந்தப் பதவிக்கும் போட்டியிட

மனமில்லை. மாநிலம் முழுமைக்கும் ஒரே ஒரு செயற்பொறியாளர் என்பதாலும், என் அலுவலகம் கிண்டியில் இருந்ததாலும் என்னால் சங்கப் பணிகளை ஆற்ற முடியவில்லை. எனினும் இல்லக்காப்பாளர் பணியை ஓரளவு சரியாகச் செய்ய முடிந்தது. அந்த மூன்று வருடங்களில் பல மூத்தப் பொறியாளர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சென்னையிலிருந்து மாறுதல் கிடைத்து மதுரை பெரியாறு மேம்பாட்டுக் கோட்டம் எண்.VIIல் மார்ச் 2012ல் பணியில் சேர்ந்தேன். சுமார் பத்து மாதம் பணியாற்றிய பின் நிறைவுடன் ஓய்வு பெறுகிறேன். இந்த பத்து மாத காலத்தில் என்னுடைய மேலதிகாரிகளான கண்காணிப்புப் பொறியாளர் திரு.எஸ்.மோகனசுந்தரம் அவர்களும் மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் திரு.எம்.சம்பத்குமார் அவர்களும் எனக்கு காட்டிய அன்பும் ஆதரவும் குறிப்பிடத்தக்கது.

இந்த 38 ஆண்டு கால துறைப் பயணத்தில் என்னுடன் பணியாற்றிய நண்பர்களையும், சக ஊழியர்களையும், அதிகாரிகளையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன். என்னை முழுவதுமாக துறைக்கே அர்ப்பணித்து விட்ட என் பெற்றோர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இதற்கெல்லாம் காரணமாக இருந்த பட்டப் படிப்பைப் பெற்றுத் தந்து என் போன்ற பொறியாளர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கும், மூத்தப் பொறியாளர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவுடன்

**பொறி.எம்.சவரிராஜ்.**

---

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20101/2012/சி.ஆர்/நாள் 31.12.2012ன் படி 31.12.2012 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | N. மகேந்திரன் | ஆட்சி அலுவலர் |
| 2. | S. ஸ்ரீதரன் | இளம் பொறியாளர் |

**இரா.கோபாலகிருஷ்ணன்,**
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) (ம)
தலைமைப் பொறியாளர், (கட்டடம்) பொ.ப.து., சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொ.ப.து. சார்பில்

---

## வருந்துகிறோம்

முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் கே.அன்புமணி உதவிச் செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 30.01.2013 அன்று இயற்கை எய்தினார். அன்னாருடைய குடும்பத்தாருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# இயங்கும் உலகம்

## சிவகங்கை கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 30.12.2012 அன்று காலை 11 மணியளவில் கிளைத் தலைவர் பொறியாளர் கே.சண்முகம் அவர்கள் தலைமையில் காரைக்குடி பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எம்.பஞ்வர்ணம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இணைச் செயலாளர் பொறியாளர் வி.பரமசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அவை அறிமுகத்திற்குப் பின் கிளைத் தலைவர் உரையாற்றினார். பின் கிளைச் செயலாளர் பொறியாளர் எஸ்.எட்வின் ஜெயராஜ் மற்றும் மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எம்.பஞ்சவர்ணம் ஆகியோர் சங்க நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்தனர். கிளைப் பொருளாளர் பொறியாளர் எஸ்.குமார் அவர்கள் கிளை சங்க வரவு செலவு கணக்குகளை எடுத்து வைத்து அவையில் ஒப்புதல் பெற்றார்.

இக்கிளையின் உதவிச் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் ஆர்.என்.ஏ.பொன்னன், எஸ்.குமார், இ.அருள்மொழிகதிர், ஜெ.ஷாஜஹான், ஜி.ரமேஷ்குமார் ஆகியோருக்கு சிறப்பு செய்து கௌரவிக்கப்பட்டது. உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு மைய மண்டலச் செயலாளர் விளக்கம் அளித்தார்.

கிளையின் பொருளாளர் பொறியாளர் எஸ்.குமார் அவர்கள் உதவிச் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று மாறுதலில் சென்றதால் கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் வி.பரமசிவம் கிளையின் பொருளாளராகவும் பொறியாளர் ஜெ.ஷாஜஹான் இணைச் செயலாளராகவும் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இணைச் செயலாளர் பொறியாளர் ஜெ.இரவீந்திரன் நன்றி நவில நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

## தீர்மானங்கள்:

1. தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் மூலம் தற்பொழுது பொதுப்பணித்துறையில் உதவிப் பொறியாளர் நியமனத்திற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விகிதாச்சார அடிப்படையில் இளம் பொறியாளர் பதவிக்கும் நேரடி நியமனத்திற்கு வழிவகை செய்யாமல், உதவிப் பொறியாளர் நியமனம் செய்ய நீதிமன்ற தடை ஆணை பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள மையச் சங்கத்தை கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. 2006-2007 ஆம் ஆண்டு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் ஒப்பளிக்கப்பட்டு பதவி உயர்வுப் பட்டியலில் விடுபட்டுப் போன ஐந்து பொறியாளர்களுடன் தற்பொழுது 2010-11 ஆம் ஆண்டிற்கான பட்டியலில் மேலும் இரண்டு பொறியாளர்களுக்கும் அவர்கள் உதவிப் பொறியாளர்களாக பதவிப் பெயர் மாற்றம் வழங்கப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு ஐந்து ஆண்டுகள் பணிபுரியவில்லை எனப் பதவி உயர்வு மறுக்கப்பட்டிருப்பதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர மையச் சங்கத்தை கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. ஊட்டுப் பதவிகளிலிருந்து இளம் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்குப் பணிவரன்முறை ஆணைகள் பெற்றிட உரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ள வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. இனி வருங்காலங்களில் உறுப்பினர்கள் துறை ரீதியாகப் பாதிக்கப்படும் பொழுது சங்கத்தின் மூலமாகவே நீதிமன்றத்தை அணுக மையச் சங்கத்தைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. கிளையில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள பொருளாளர் பொறியாளர் வெ.பரமசிவம் மற்றும் பொறியாளர் எஸ்.எட்வின் ஜெயராஜ் செயலாளர் இவர்கள் இணைந்து இன்று முதல் சங்க வரவு செலவுக் கணக்குகளை மேற்கொள்ள இப்பொதுக்குழுவில் முழு ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## சென்னை கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து, சென்னைக் கிளையின் பொதுக்குழு மற்றும் புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம் 29.12.2012 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சென்னை பொறியியல் இல்லம், சி.ப. சண்முகம் அரங்கில் சென்னைக் கிளை தலைவர் பொறியாளர் நா.புண்ணியகோட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன், வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன், நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.நடராஜன், பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் அ.பெ.வெங்கடாசலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஓய்வு பெற்ற மூத்தப் பொறியாளர்கள் பலரும் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் தமிழ்நாடு பட்டயப் பொறியாளர்கள் பேரவை பொதுச் செயலாளர் பொறியாளர் கே.வாசுதேவன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்திற்குப் பிறகு கிளையின் பொதுக்குழு கூட்டம் அவை அறிமுகத்துடன் இனிதே துவங்கியது. கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் எஸ்.கே.கருப்பசாமி அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள். பின்னர் கிளையின் தலைவர் பொறியாளர் நா.புண்ணியகோட்டி அவர்கள் தலைமையுரை மற்றும் கிளையின் செயல்பாடுகள் குறித்து பேசினார். கிளையின் பொருளாளர் பொறியாளர் எ.மணிமாறன் அவர்கள் 01.10.2011 முதல் 27.12.2012 வரையிலான காலத்திற்கான கிளையின் வரவு செலவு விபர அறிக்கையினை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

மாநில பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் மைய சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார்.

உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களுக்கு பொதுச் செயலாளர் மற்றும் மூத்தப் பொறியாளர் திரு.சி.ப.சண்முகம் அவர்கள் கிளையின் சார்பாக பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

2013 ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டியினை முறையே பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் மற்றும் வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் ஆகியோர் வெளியிட மூத்தப் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மூத்தப் பொறியாளர் தியாகச் செம்மல் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள் சங்கத்தின் முன்னேற்றத்திற்கும் உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்கும் நூற்றாண்டு விழா குறித்தும் தேவையான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

பொறியாளர் ஆ.நடராஜன் அவர்கள் நன்றியுரை கூற மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்:

1. பிரிவு மட்டத்தில் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உருவாக்க நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

2. ஒருநபர் குழுவில் இளம் பொறியாளர்களுக்கு உள்ள ஊதிய முரண்பாட்டை களைய நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

3. சென்ற உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் விடுபட்டுப்போன 101 உதவிச் செயற்பொறியாளர் பணியிடங்களை விரைந்து பெற்றிட தகுந்த நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

## தருமபுரி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளையின் பொதுக்குழு பொதுப்பணித்துறை வளாகத்தில் 29.12.2012 மாலை 04.30 மணி அளவில் தமிழ்த்தாயுடன் துவங்கியது. கிளை பொதுக்குழுக்கு 27 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இணைச் செயலாளர் பொறியாளர் பி.ஆறுமுகம் வரவேற்றார். கிளைத் தலைவர் பொறியாளர் பி.நடராஜன் உரையாற்றினார். கிளைச் சங்கம் மற்றும் மையச் சங்க நடவடிக்கைகள் பொறியாளர் எஸ்.ஆர்.சுப்பிரமணியம் உரையாற்றினார். உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், பாலசுப்பிரமணியம், நாகராஜ் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு கிளைச் செயலாளர் விளக்கம் அளித்தார். சமீபத்தில் உதவிச் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள், ஏ.செல்வராஷ் மற்றும் ப.நகுலன் ஆகியோருக்கு பொன்னாடை போற்றி கவுரவிக்கப்பட்டது. தொழில் நுட்ப உதவியாளரிலிருந்து இளம் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற பாலாமணி மற்றும் மணிவண்ணன் ஆகியோருக்கு பொன்னாடை போற்றி கவுரவிக்கப்பட்டது. பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் கிளை வளர்ச்சி நிதி நன்கொடை கொடுத்து பாராட்டு பெற்றனர். பின்னர் கிளையின் உபத்தலைவர் மற்றும் இணைச் செயலாளர் வேறு கிளைக்கு மாறுதலில் சென்றமையால் கீழ்க்கண்ட பொறியாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| கிளை உபத்தலைவர் - | பொறி.ஏ.செல்வராஜ், உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து., வரட்டாறு நீர்த்தேக்க திட்ட உபகோட்டம், அரூர். |
| கிளை இணைச் செயலாளர் - | பொறி.எஸ்.கிருஷ்ணன், இளம் பொறியாளர், பொ.ப.து., பாசனப்பிரிவு, கிருஷ்ணகிரி. |

கிளையின் சார்பாக கிளை உறுப்பினர்களுக்கு, தினசரி நாட்காட்டி வழங்கப்பட்டது. புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்ற பின் இணைச் செயலாளர் பொறியாளர் எஸ்.கிருஷ்ணன் நன்றி நவிழ விழா இனிதே நிறைவுற்றது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்:

1. மையச் சங்கத்தின் தீவிர முயற்சியால் 174 இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளருக்கு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத் தந்தமைக்கு இக்கிளை மையச் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறது.
2. நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணிவரன்முறையை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து தீர்வு காண இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.
3. இக்கிளையின் உறுப்பினர் பொறியாளர் சேதுமாதவன், தொழில் நுட்ப உதவியாளலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத் தர இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. இளம் பொறியாளர் ஊதிய உயர்வு மாற்றம் பற்றி தீவிர நடவடிக்கை எடுக்க கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. இளம் பொறியாளர் பதவிக்கு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்ட பின் உதவிப் பொறியாளர் பணி காலியிடம் நிரப்ப இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. நூற்றாண்டு விழாவை விரைவில் நடத்தி முடிக்க இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் உதவிப் பொறியாளர் பணி நிரப்பப்பட்டால் அதற்கு நீதிமன்ற தடையாணை பெற இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 FEBRUARY 2013
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# நான்கு கட்டப் போராட்டங்கள்

அதிகாரிகளின் மெத்தன போக்கால், அலட்சிய போக்கால் பணிவரன்முறை செய்யப்படாமல் 400 இளநிலைப் பொறியாளர்கள் பதவி உயர்வு, பதவி பெயர் மாற்றம் கிடைக்காமல் பெரும் பாதிப்பு. யாரும் கண்டு கொள்ளாத அவலம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு செல்ல கீழ்க்கண்ட நான்கு கட்டப் போராட்டங்கள் நடத்த 05.01.2013 அன்று நடைபெற்ற மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1) கைப்பிரதி, சுவரொட்டிகள் அடிப்பது.
2) வாயிற்கூட்டம் நடத்துவது.
3) ஒருநாள் அடையாள உண்ணாவிரதம்.
4) தொடர் உண்ணாவிரதம்.

**- பொதுச் செயலாளர்**

**நமது சங்கத்தின் Website : www. tnengga. org**
**email id : tneapwd@yahoo.co.in**

தந்தி: பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர் :
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

5.2.2013

**REGD. NEWS PAPER**
**POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL**
**POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM**

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN.,** D.C.E., B.Tech., GENERAL SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223